UNIVERSITY OF MALAYA

# Certificate of Attendance

This is to certify that

Dr. RM. Chandrasoodan

has attended and presented a paper on the title

Tamil Ilakkiyangalil Siddha Maruthuvam

in the

**INTERNATIONAL CONFERENCE ON HETEROGENEOUS PERSPECTIVES IN TAMIL LANGUAGE AND LITERATURE**

jointly organized by

Kongunadu Arts and Science College, Coimbatore, Tamilnadu, India
Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia
Thirupputhur Thiruneri Thirumandram, Thirupputhur
Sydney Tamil Valarchi Mandram, Australia
Na. Subbureddiyar 100 Educational Trust, Chennai
Dr. M. Aruchami Research Foundation, Coimbatore, Tamilnadu

held on

15th July 2019

at

Kongunadu Arts and Science College
Coimbatore, Tamilnadu

Dr. M. KRISHANAN
Assoc. Prof. & Head
Dept. of Indian Studies
University of Malaya
Kuala Lumpur

Dr. C. A. VASUKI
Secretary & Director
Kongunadu Arts and Science College
Coimbatore

Dr. S. CHANDRIKA
Conference Co-ordinator
Sydney Tamil Valarchi Mandram
Australia

Dr. S. KUMARAN
Assoc. Prof. & Convener
Dept. of Indian Studies
University of Malaya
Kuala Lumpur

Dr. K. MURUGESAN
Convener & Head
Department of Tamil
Kongunadu Arts and Science College
Coimbatore

Dr. M. CHITHAMBARAM
Associate Prof. in Tamil
Alagappa Government Arts College
Karaikudi

Dr. S. RAMALINGAM
Founder
Na. Subbureddiyar 100 Educational Trust
Chennai



# பன்னோக்குப் பார்வையில்
# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தொகுதி – II

பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் சு. குமரன்
முனைவர் கிருஷ்ணன் மணியம்
முனைவர் சு. இராமலிங்கம்
முனைவர் த. பிரியா

# பன்னோக்குப் பார்வையில் தமிழ்மொழியும் இலக்கியமும்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் கிருஷ்ணன் மணியம்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**முனைவர் த. பிரியா** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஏப்ரல், 2019 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>**கோயம்புத்தூர் - 641 029.** |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 9843273994,7092092066 |
| பக்கங்கள் | : | XXII + 488 = 510 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 56 - 1**

# International Conference on Heterogeneous Perspectives in Tamil Language and Literature

| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. Krishnan Maniyan.**<br>**Dr. S. Ramalingam. Dr. D. Priya** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | April, 2019 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>**Coimbatore - 641 029.** |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 9843273994, 7092092066 |
| Pages | : | XXII + 488 = 510 |
| Prize | : | **Rs. 400/-** |

129. பேரா.வை. குணசேகரன் மற்றும் முனைவர் பொ. வெங்கடேசன் 698
புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் தொழிற்பாடல்

130. முனைவர் வெ. திருவேணி 702
தமிழ் இலக்கியங்களில் மன்னனும் மக்களும்

131. முனைவர் ஆ. சரவணன் 707
நீலகிரியின் பூர்வக்குடிகள் படகர்

132. மகேஸ்வரி தேவராஜ் 711
நாயன்மார்களின் ஆலயத் திருப்பணிகள்

133. ந. நதியா 715
கார்நாற்பது கூறும் முல்லைநில வருணனை

134. முனைவர் து. சேகர் 720
ஒப்பீட்டு நோக்கில் கல்வியியல் சிந்தனைகள்
(நன்னூலார் - தற்காலக் கல்வியியலார்)

135. முனைவர் இரா. மாலதி 726
தமிழில் உயிர் அறிவியல் சிந்தனைகள்

136. முனைவர் பா. காசிவைரவன் மற்றும் முனைவர் போ. மாரிச்சாமி 731
தமிழ் இலக்கியங்களில் வணிகர்களின் பண்பாடு

137. முனைவர் மா. முத்துராமன் 735
திராவிடநாடு இதழில் சிறுகதைகள்

138. முனைவர் சொ.மெ. அழகப்பன் மற்றும் முனைவர் இராம. சந்திரசூடன் 741
தமிழ் இலக்கியங்களில் சித்தமருத்துவம்

139. சு. மகாலட்சுமி 747
சுப்ரபாரதிமணியனின் ரேகை புதினத்தில் வாழ்வியல் கூறுகள்

140. முனைவர் இரா. ஜெகதீசன் 752
தொல்காப்பியம் : அன்றும் இன்றும்

141. முனைவர் வெ. சத்யநாராயணன் 759
விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்

142. முனைவர் ஜெ. பிருந்தா ஸ்ரீ 764
வீரம் நிறை காவற்பெண்டு

143. முனைவர் மகா. சுந்தர் 769
வள்ளுவத்தில் தாய்மை

# 138. தமிழ் இலக்கியங்களில் சித்தமருத்துவம்

**முனைவர் சொ.மெ. அழகப்பன்**
இணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை
அம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்
சிவகங்கைமாவட்டம்

**முனைவர் இராம. சந்திரசூடன்**
உதவிப்பேராசிரியர்
வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை
அம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்
சிவகங்கைமாவட்டம்

## முன்னுரை

'நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்'. அகத்தியர், தேரையர், போகர், புலிப்பாணி போன்ற பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்தமருத்துவம். உலகில் பின்விளைவுகளற்ற மருத்துவங்களுள் சித்தமருத்துவமும் ஒன்று. இன்று பரவலாகப் பயின்றுவரும் இயற்கை மருத்துவம் என்னும் மருந்தில்லா மருத்துவ முறையை, அன்றேநம் தமிழ் இலக்கியங்களில் காணலாம்.

## திருக்குறள் உணர்த்தும் மருத்துவம்

திருவள்ளுவர், 'மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். உடலில் வாதம், பித்தம், சீதம் ஆகிய மூன்றின் சமநிலைமாறும் போது நோய் மிகும். இதனை

*'மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலாஎண்ணிய மூன்று' குறள் 941*

என்கிறார் திருவள்ளுவர். தமிழர்கள், அவற்றைச் சமப்படுத்த இயற்கைதரும் காய்கனிகளிலிருந்தே மருந்துகண்டு உண்டனர். எல்லா உறுப்புகளும் மருந்தாகி நோயைத் தவறாது தீர்ப்பது மரம் என்பதை

*'மருந்தாகித் தப்பாமரத்தற்றால்' குறள் 217*

என்னும் திருக்குறள் வரி எடுத்தியம்பும். மேலும்,

*மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்குஅருந்தியது*
*அற்றதுபோற்றிஉணின். - குறள் 942*

என்கிறார்.

## தொல்காப்பியத்தில் சித்தமருத்துவம்

தொல்காப்பியர் செய்யுளியலில் பெரியோர்களை வாழ்த்தும் முறை பற்றிய நூற்பாவில்

*'வாயுறைவாழ்த் தேவயங்கநாடின்*
*வேம்பும் கடுகும் போலவெஞ்சொல்'*

என்று பாடியுள்ளார். உறை என்றால் மருந்து. வாயுறை என்றால் வாய்மொழி மருந்து. அதாவது, முன்னால் கசந்து பின்னால் உடலுக்கு உறுதிபயக்கும் வேம்பும் கடுகும் போல ஒருவர் சொல்லும் கடுஞ்சொல் பின்னாளில் நன்மை பயக்கும் என்கிறார்.

## கம்பராமாயணத்தில் அறுவை மருத்துவம்

விபீடணன் கும்பகர்ணனிடம், 'உடலில் தோன்றிய தொளுகழல் புண்ணை அதன் விடநீர் உடலில் பரவாதபடி அறுத்து, அதிலுள்ள அசுத்தமான உதிரத்தை வெளியேற்றி, காரத்தைப் பொருந்த வைத்துக் கட்டி, உலர்த்தி அதற்குரிய வேறொரு மருந்தினால் துயரம் நீங்கப் பெறுவீர்களாக' என்று கூறியதாகக் கம்பராமாயணம் கூறுகிறது.

***'உடம்பிடைதோன்றிற் றொன்றைஅறுத்ததன் உதிரம் ஊற்றி***
***அடல்உறச் சுட்டுவேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்'***

என்னும் கம்பர்வாக்கு அறுவை மருத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.

## புறநானூற்றில் சித்தமருத்துவம்

காயம்பட்ட புண்ணுக்கு பஞ்சுவைத்துக் கட்டும் மருத்துவ வழக்கம் அக்காலத்தில் இருந்தது என்பதை

***'பஞ்சியும் களையாப் புண்ணர்' 353,வரி 16***

என்றுபுறநானூறு கூறுகிறது.

அமுதக்கனியாகிய நெல்லிக்கனி ஒரு கற்பக மருந்தாகும். நெல்லிக்காய் வெப்பம் அகற்றி, சிறுநீர்பெருக்கி, குடல் வாயு அகற்றும் ஓர் அதிசயக் கனியாகும். அக்கனியின் அருமை உணர்ந்த கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான், தனக்குக் கிடைத்த சாகாவரம் பொருந்திய நெல்லிக்கனியை ஔவைப் பாட்டிக்குப் பரிசாகத் தந்து 'கோன் உயர குடி உயரும்' என்ற தத்துவத்திற்கு வித்திட்டார். அதனால், அவ்வைப் பாட்டி 'உன்னுடைய சாவைக் கூடக் கருதாமல் நீண்டநாள் வாழவேண்டும் என்று அதை எனக்குக் கொடுத்தாயே' என்று அவனைப் புகழ்ந்து பாடுகிறார். அவ்வரிகள் பின்வருமாறு:

***பெரும! நீயேதொன்னிலைப்***
***பெருமலைவிடரகத்துஅருமிசைகொண்ட***
***சிறியிலைநெல்லித் தீங்கனிகுறியாது,***
***ஆதல் நின்னகத்துஅடக்கிச்***
***சாதல் நீங்க,எமக்குஈந்தனையே. (புறம்: 91: 6-11)***

மருந்துக்காக மரத்திலிருந்து பட்டையெடுத்தலை குறிக்கும் வகையில்

*'மருந்துகொள் மரத்தின் வாள்வடுமயங்கி*
*மருந்துமரத்தின் பயனாகக் கொள்வர்'* (புறம் 180)

என்ற புறநானூற்று வரிகள், அரசன் உடம்பில் இருக்கும் விழுப்புண் காயங்கள், மருந்துக்காகப் பட்டையைக் காயப்படுத்திய மரத்தில் காயம் ஆறிப்போய் உள்ளவடுக்களைப் போல் இருக்கும் என்று கூறுகிறது.

## அகநானூற்றில் சித்தமருத்துவம்

நெல்லிக்காய் தண்ணீர் தாகத்தைத் தீர்த்து உடல் வளர்க்கும் மூலிகை என்பது,

*'...... கோட்சுரம் நீந்தி*
*நெடுஞ்சேண் வந்தநீர்நசைவம்பலர்*
*செல்லுயிர்நிறுத்தசுவைக்காய் நெல்லி'* (அக 271)

என்ற பாடல் வரிகளால் விளங்கும்.

## சிறுபாணாற்றுப்படையில் சித்தமருத்துவம்

*'ஓங்குபசிஉழந்தஒடுங்குநுண்மருங்கில்*
*வளைக்கைகிணைமகள் உள்உகிரக் குறைத்த*
*குப்பைவேளைஉப்பிலிவெந்ததை'* (சி.பா.135)

என்ற வரிகள் நல்வேளை என்னும் சாதாரணக் கீரையை உப்பில்லாமல் சமைத்துண்ண உடலுக்கு ஆரோக்கியம் தரும் என்பதாகும்.

## நற்றிணையில் சித்தமருத்துவம்

நோயுற்றவர்களுக்கு, அவர்கள் விரும்பியதைக் கொடுக்காமல் மருந்தை ஆராய்ந்து கொடுப்பவனே சிறந்த மருத்துவன் என்கிறது நற்றிணை. அவ்வாறு மருந்தளிக்கும் மருத்துவனை 'அறவோன்' என்று கூறுவதை, கீழ் வரும் நற்றிணை வரிகளால் அறியலாம்.

*'அரும்பிணிஉறுநர்க்குவேட்டதுகொடாஅது*
*மருந்தாய்ந்துகொடுத்தஅறவோன்'* (நற்.126)

மருந்துக்குப் பயன்படும் மரம் ஓரிடத்தில் காணப்பட்டால், அம்மரம் பட்டுப் போகுமளவிற்கு அம்மரத்திற்கு யாரும் துன்பம் செய்யக்கூடாது என்ற கருத்தினை,

*'மரம்சாமருந்தும் கொள்ளார்மாந்தர்'* (நற்.226)

என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

## பழமொழி நானூற்றில் சித்தமருத்துவம்

அக்காலத்தில், வீட்டுக் கொல்லைப் புறத்தில் வளர்க்கும் மூலிகைச் செடிகள் நோய்கண்ட காலத்து அவசர மருந்தாகப் பயன்பட்டது. பழமொழி நானூறு என்ற நூலில் உள்ளபாடல் புழைக்கடைப் பச்சிலையின் மகத்துவத்தைச் சொல்கின்றது.

*'அல்லல் ஒருவற்குஅடைந்தக்கால் மற்றவர்க்கு*
*நல்லகிளைகள் எனப்படுவார் - நல்ல*
*வினைமரபின் மற்றதனைநீக்குமதுவே*
*மனைமரம் ஆய மருந்து'* (பாடல்: 53)

ஒருவருக்குத் துன்பம் வரும்போது, அத்துன்பத்தை நீக்கவரும் உற்றார் எனப்படுபவர், வீட்டின்கண் உள்ள பச்சிலை மரம் போலாவார் என்பதே அப்பாடலின் கருத்து.

## சிலப்பதிகாரத்தில் சித்தமருத்துவம்

பழந்தமிழர் மூலிகைகளைக் கொண்ட 'ஆயுர்வேதம்' என்னும் மருத்துவ முறையை நன்கு அறிந்திருந்தனர் என்பதை இளங்கோவடிகள் இந்திரவிழா ஊரெடுத்த காதையில் கூறியுள்ளார்.

*'வீழ்குடிஉழவரொடுவிளங்கியகொள்கை*
*ஆயுள் வேதரும் காலக் கணிதரும்*
*பால்வகைதெரிந்தபன்முறை இருக்கையும்'* (43-45)

சிலப்பதிகாரத்தில் அரைப்பு முறையால் செய்யும் மருந்துகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

*சந்தானகரணி - முரிந்தஉறுப்புகளைஒட்டுவது*
*சல்லியகரணி - வேல் தைத்தபுண்ணைஆற்றுவது*
*சமனியகரணி - புண்ணின் தழும்பைமாற்றுவது*
*மிருதசஞ்சீவினி - இறந்தஉடலைஉயிர்ப்பிக்கச் செய்வது*

## பதிற்றுப்பத்தில் அறுவைமருத்துவம்

போர்க் காலங்களில் போர்வீரர்களுக்கு ஏற்படுகின்ற விழுப்புண்ணைத் தைக்கும் முறையைப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது.

*'மீன்தேர்கொட்பின் பனிக்கய மூழ்கிச்*
*சிரல் பெயர்ந் தன்னநெடுவள் ஊசி*
*நெடுவசிபரந்தவடுவாழ் மார்பின்'*
(பதிற்றுப்பத்து 5: 1-3)

நீரிலுள்ள மீனைக் கொத்துவதற்காக நீரில் பாய்ந்து, அடுத்த நொடியில் நீரைவிட்டு மேலே பறந்து செல்லும் சிரல் பறவையைப் போல, நெடிய வெள்ளை ஊசி புண்ணுக்குள் நுழைந்து வெளியே வருகிறது என்பதே இப்பாடல் குறிக்கும் கருத்தாகும்.

## திருமூலர் கூறும் மருத்துவம்

உறுதியான உடம்பில்தான் ஆன்மா செவ்வனே உறையும் என்பது நம் முன்னோர்கள் நம்பிக்கை.

*'உடம்பார்அழியின் உயிரார்அழிவர்*
*திடம்படமெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்*
*உடம்பைவளர்க்கும் உபாயமறிந்தே*
*உடம்பைவளர்த்தேன் உயிர்வளர்த்தேனே'*

என்றும்

*'தேகமிருந்தல் லோசித் தெல்லாமாடலாம்*
*தேகமிருந்தக்கால் சேரலாம் பூரணம்*
*தேகமிருந்தக்கால் செயலெல்லாம் பார்க்கலாம்*
*தேகமிருந்தக்கால் சேரலாம் முத்தியே'*

என்றும் திருமூலம் கூறுகிறது.

## பஞ்சமரபில் குரல் வளத்திற்கானமருத்துவம்

சேறை அறிவனார் என்னும் இசை மேதையால் இயற்றப்பெற்ற 'பஞ்சமரபு' என்னும் இசைநூல் இசைப் பாடகர்கள் குரல் வளம் பெறமருந்தை உரைக்கின்றது.

*'திப்பிலிதேன்மிளகுசுக்கினோடிம்பூரல்*
*துப்பில்லா ஆன்பால் தலைக்காடைஒப்பில்லா*
*வெந்நீரும் வெண்ணெயுமெய்ச் சாந்தும் பூசவிவை*
*மன்னூழி வாழும் மகிழ்ந்து' (பஞ்சமரபு 63)*

இச்செய்யுள் திப்பிலி, தேன், மிளகு, சுக்கு, இம்பூரல், பசுவின்பால், தலைக்காடை, மெய்ச்சாந்து இவற்றைவெண்ணெய் விட்டு அரைத்து வெந்நீரில் குழைத்துப் பூசிவரக் குரலின் வளம் அதிகப்படும் என்கிறது.

## சீவகசிந்தாமணியில் குழந்தைமருத்துவம்

*'காடி யாட்டித் தராய்ச் சாறும் கன்னன் மணியும் நறுநெய்யும்*
*கூடச் செம்பொன் கொளத் தேய்த்துக் கொண்டுநாளும் வாயுறீஇப்*
*பாடற் கினியபகுவாயும் கண்ணும் பெருகஉகிர்உறுத்தித்*
*தேடித் தீந்தேன் திப்பிலிதேய்த்துஅண்ணாஉரிஞ்சி*
*மூக்குயர்ந்தார்' சீ.சி.2703*

பிரமிச்சாறு, கண்டசர்க்கரை, தேன், நறுநெய் ஆகியவற்றுடன் காடியைக் கூட்டி, பொன்னினால் தேய்த்துக் குழந்தைகள் உண்ணுகின்ற அளவிற்குப் பக்குவப்படுத்திய மருந்தாக்கி தினமும் வாய்வழி ஊட்டினர் என்கிற இச்செய்யுளின் மூலம் குழந்தை மருத்துவத்தினை அக்காலத் தமிழர் அறிந்திருந்தனர் என்பது தெரிய வருகின்றது.

## கண்ணப்பநாயனார் புராணத்தில் கண்மருத்துவம்

கண்ணப்ப நாயனார் சிவலிங்கத்தின் கண்களிலிருந்து வடிந்த குருதியை நிறுத்த பச்சிலைகளைப் பறித்து, அவற்றின் சாற்றை மருந்தாகப் பயன்படுத்தினார் என்பதை

*'புனத் தீடைபறித்துக் கொண்டுபூதநாயகன்பால் வைத்த*
*மனத்தினும் கடிதுவந்தம் மருந்துகள் பிழிந்துவார்த்தார்'*

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது. பச்சிலைச் சாறுபிழிந்தும் குருதி நிற்காததால், 'ஊனுக்கு ஊன்' என்று எண்ணி தன் கண்ணைப் பெயர்த்து இறைவன் கண்ணில் அப்பினார் என்பது புராணம். இதுவே கண் தானத்திற்கு முன்னோடியாக இருந்திருக்கக் கூடும்.

## முடிவுரை

சித்த மருத்துவம் என்பது தமிழரின் அருட்பெருஞ் செல்வமாகும். நாடியைப் பார்த்து நோயை அறிவது சித்தர் முறையாகும். நோய்களைப் பற்றியும் அதனைத் தீர்க்கும் முறைகளைப் பற்றியும் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே தமிழகத்தில் நன்கு உணரப்பட்டிருந்ததை மேற்கூறிய இலக்கியங்கள் மூலம் அறியலாம். திருவள்ளுவர் மருத்துவரை மனிதகுலத் தொண்டர் எனக்கூறுவது மிகையல்ல. மனிதனுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை அளித்திடும் மருத்துவக் கலையை இலக்கியத்துடன் இணைத்தவர்கள் சித்தர்களே.